# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ் விஜயம் கடுமையான பாதுகாப்பு – போராட்டமும் முன்னெடுப்பு

## போராட்டக்காரர்கள் மூவர் கைதாகினர்





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தை இன்று மாலை 4 மணியளவில் வந்தடைந்தார்.

யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் பாடசாலை அருகே உலங்கு வானூர்தி மூலம் வந்த ஜனாதிபதி, வாகன தொடரணியாக மாவட்ட செயலகத்தை சென்றடைந்தார்.

வடக்கு மாகாணத்திற்கு நான்கு நாள் பயணமாக வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தொடர் சந்திப்புக்களில் ஈடுபடவுள்ளார்.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 13 புதன்கிழமை 04.01.2024 கதிர் 151

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

## மேலும் 1,038 பேர் கைது

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ் இன்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 1,038 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் 67 பேர் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், போதைப்பொருட்களுக்கு அடிமையான 43 பேர் புனர்வாழ்வு மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த காலப்பகுதியில் 417 கிலோ கிராம் ஹெரோயின், 24 ஆயிரத்து 203 கஞ்சா செடிகள் மற்றும் 722 போதை மாத்திரைகள் என்பவற்றுடன் பல்வேறு போதைப்பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியகம் மற்றும்

2 ▶

## வடமேல் மாகாணத்தில் தனியார் வகுப்புகளுக்கும் பணம் வசூலித்து கருத்தரங்குகள் நடத்தவும் தடை!

வடமேல் மாகாண பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களிடம் இருந்து பணம் வசூலித்து தனியார் வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதை முற்றாக தடை செய்து வடமேல் மாகாண கல்வி அமைச்சு சுற்று நிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை 01.01.2024 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண முதலமைச்சு மற்றும் வடமேல் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் நயனா காரியவசத்தின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சுற்றறிக்கை வடமேல் மாகாண பாடசாலைகளின் அனைத்து அதிபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாகவும், குறித்த சுற்றறிக்கையை மீறும் ஆசிரியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அந்த

2 ▶

## ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கான மகஜரில் கையொப்பங்கள் சேகரிப்பு



ஜனாதிபதியிடம் கையளிப்பு செய்யப்படவுள்ள, அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழிசெய்வதற்கான மகஜரில் கையொப்பமிடும் நடவடிக்கை இன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.

குரலற்றவர்களின்

2 ▶

## விமான சேவைகள் தொழிற் சங்க தலைவர் உட்பட 28 பேர் கட்டாய விடுமுறையில்!

விமானச் சேவைகளை சீர்குலைக்க முயற்சித்தனர் என்ற சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய ஐக்கிய தொழிற் சங்கத்தின் தலைவர் உட்பட அங்கு மேலும் பல பதவிகளை வகித்த 28 பேர் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானப் போக்குவரத்து சேவைகளை சீர்குலைக்கும் திட்டத்துடன் விமான சேவைகள்

2 ▶

## முன்னாள் எம்.பி. தயாசிறி திசேரா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவு



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி த திசேரா, ஐக்கிய மக்கள் சக்தியில் இன்று இணைந்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் வகையிலேயே அவர் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் மலரவுள்ள கூட்டணிக்குத் தமது ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் புத்தளம், நாத்தாண்டி தேர்தல் தொகுதி அமைப்பாளராகவும்

2 ▶

## ஜனாதிபதியின் வருகையை அடுத்து 5 பேருக்கு வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை (05) வெள்ளிக்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், குறித்த பகுதியில் ஆர்ப்பாட்டம் செய்ய 5 பேருக்கு வவுனியா நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

இன்றைய தினம் (04) உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோர் வவுனியா நீதிமன்றில் தோன்றி முன்வைத்த முறைப்பாட்டின் அடையில் இத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஜனாதிபதி 5 ஆம் திகதி அரச கடமைகளில் ஒன்றான மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடுவதற்கு வருகை தரவுள்ளார். அதில் அரச அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது குறித்த பகுதியில் அமைதியின்மையை ஏற்படுத்தவும், வீதியை மறித்து அல்லது அப்பகுதியை மறித்து குழம்பும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த 5 பேருக்கு எதிராகவும், அவர்களது அமைப்புக்களுக்கு எதிராகவும் பொலிசார் தடை உத்தரவு கோரியிருந்தனர். அதனை கவனத்தில் எடுத்த மன்றும் 03.01.2024 இரவு 12 மணி முதல் 05.01.2024 இரவு 12 மணி வரை தடை உத்தரவு விடுத்துள்ளது.

அதனடிப்படையில் குறித்த தடை உத்தரவானது காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்களைச் சேர்ந்த கோ.ராஜ்குமார், கா.ஜெயவனிதா, ஜெனிற்றா, சரோஜினிதேவி மற்றும் முன்னாள் முன்னாள் அரசியல் கைதியும், போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவருமான அரவிந்தன் ஆகியோருக்கே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தடை உத்தரவு பொலிசாரால் சம்மந்தப்பட்டவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# டுபாயிலிருந்து ஹெரோயின் கடத்துபவர் இலங்கையில் வணக்க ஸ்தலங்களை அமைக்க பணம் அனுப்பியுள்ளாராம்!

டுபாய் நாட்டில் தலைமறைவாகி வாழ்கின்ற போதைப் பொருள் கடத்தல்காரர் ஒருவர் இலங்கையில் பல வழிபாட்டுத் தலங்களைக் கட்டுவதற்காக கோடிக்கணக்கான பணத்தை செலவு செய்துள்ளமை தெரியவந்துள்ளதாக புலனாய்வு அமைப்புகள் தகவல் வெளியிட்டுள்ளன.

மேற்படி போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சொந்தமான பல வர்த்தக இடங்களை பொலிஸார் கண்டுபிடித்துள்ளதுடன் அவற்றை அரசுடைமையாக்குவதற்கான நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நபர் டுபாய் நாட்டில் தலைமறைவாகி இலங்கைக்கு பெருமளவில் ஹெரோயின் போதைப்பொருளை கடத்தி வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிகின்றனர்.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்த கடத்தல்காரரினால் தனது கையாட்கள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் ஊடாக கட்டப்பட்டுள்ள அனைத்து மத ஸ்தலங்களும் அடையாளம் காணப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-14)

# வவுனியா வயல்களில் அந்துப் பூச்சி தாக்கம்!

வவுனியா மாவட்டத்தில் நெற்செய்கைகளில் வண்ணத்துப் பூச்சியை போன்ற ஒரு பூச்சி இனம் நோயைப் பரப்பி வருவதாகவும் இதன் காரணமாக தமது செய்கை பெரும் பாதிப்பை அடைந்து வருவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த நோயை கட்டுப்படுத்துவதற்கு பல வகையான கிருமி நாசினிகளை பயன்படுத்திய போதிலும் அவை எதுவும் பலனின்றி போயுள்ளதாக தெரிவிக்கும் விவசாயிகள், தாம் கடன் பட்டு செய்த நெற்செய்கை இவ்வாறு பாதிப்புக்குள்ளாவதையிட்டு வேதனை அடைவதாகவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் கபிலநிற தத்தி, வெண் முதுகுத் தத்தி, மடிச்சு கட்டி போன்ற நோய்கள் தமது நெற்பயிர்களை தாக்கிய நிலையில் அவற்றை ஓரளவு கட்டுப்படுத்தி வருகின்ற கட்டத்தில் இவ்வாறான வண்ணத்துப் பூச்சி போன்ற புதிய பூச்சி இனம் ஒன்று, தமது வயல்வெளிகளில் காணப்படுவதாகவும் விவசாயிகள் குறிப்பிட்டனர்.

குறித்த நோயானது அந்து பூச்சி என அடையாளப்படுத்துவதாகவும் இதனை கட்டுப்படுத்துவதற்கு தமது பிரதேச விவசாய போதனாசிரியரை நாடி அது தொடர்பில் அறிந்து கொள்ள முடியும் எனவும் வவுனியா மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் பி. அற்புதச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

மேலும் குறித்த வயல்களையும் இன்றைய தினம் அவர் பார்வையிட்டு, அந்தப் பூச்சி இனம் தொடர்பாக உறுதிப்படுத்தி, விவசாயிகளுக்கு தெளிவூட்டலையும் மேற்கொண்டிருந்தார். (04)

## விமான சேவைகள் தொழிற் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பியமை மற்றும் ஊடகங்கள் மூலம் அவற்றை பிரச்சாரப்படுத்தயமை தொடர்பிலேயே மேற்படி நபர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இலங்கையுடன் விமானப் போக்குவரத்துத் தொடர்புகளை பேணும் அனைத்து விதமான விமான சேவைகளையும் சீர்குலைக்கும் நோக்கில் குறித்த தொழிற்சங்க தலைவர் கடிதங்களை அனுப்பியமையை கவனத்திற் கொண்டே குறித்த தொழிற்சங்க தலைவரும் இதர உறுப்பினர்களும் கட்டாய விடுமுறையில் அனுப்பப்படுவதாக குறிப்பிட்டு அதற்கான உத்தரவு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக விமான நிலைய மற்றும் விமான சேவைகள் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய செயல்களை புரிவதற்கு இவர்களுக்கு எந்தவிதமான சட்டப்பூர்வ உரிமையும் கிடையாது என குறிப்பிடும் விமான சேவைகள் தலைவர், இந்த சட்ட விரோத நடவடிக்கை தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதற்காவே இவர்கள் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ரெத-13)

## முன்னாள் எம்.பி. தயாசிறி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர் நியமிக் கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷான் விஜயலால் த சில்வா கடந்த முதலாம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜனாதிபதியிடம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சமய தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (01)

## மேலும் 1,038 ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட பணியகத்தால் தேடப்பட்டு வந்த 84 சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## வடமேல் மாகாணத்தில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையை முறையாக நடைமுறைப் படுத்துவதற்கு அதிபர்களே பொறுப்பு என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் தனியார் பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளுக்குச் செல்லாத மாணவர்களைப் பாடசாலை வகுப்பறைகளில் புறக்கணித்து பல்வேறு மன அழுத்தங்களுக்கு ஆளாக்குவதாக பெற்றோரிடம் இருந்து வந்த முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு வடமேல் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவின் ஆலோசனையின் பிரகாரம் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நயனா காரியவசம் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளின்படி, சில ஆசிரியர்கள் தமது கடமை நேரத்தில் வகுப்பில் கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்காக மேற்கொள்வதில்லை எனவும், தமது தனிப்பட்ட வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளில் பங்குபற்றாத வகுப்பு மாணவர்களை புறக்கணித்து மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் பல்வேறு அழுத்தங்களை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அந்த துரதிஷ்டமான சூழ்நிலையை தவிர்த்து, மாணவர்களுக்கு திருப்தியான வகுப்பறையை உருவாக்கி, அதன் மூலம் நாட்டின் எதிர்காலத்திற்கு சரியான ஆளுமை கொண்ட மாணவர்களை உருவாக்குவதற்காக இது மேற்கொள்ளப்படுவதாக சுட்டிக்காட்டிய செயலாளர், இதன் மூலம் வடமேல் மாகாணத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களின் முறையான பங்களிப்பைப் பெற்று அவர்களின் தொழில் கௌரவமும் பெருமையும் பாதுகாக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2012/37 மற்றும் 2012/13 இலக்க சுற்றறிக்கைகள் தொடர்பில் விதிக்கப்பட்ட இந்த உத்தரவு அமுல்படுத்தப்படவுள்ளதாக அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி ரணில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் பங்கேற்புடன் யாழ் மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டம் ஆரம்பமானது.

இந்த நிலையில், யாழ்ப்பாணம் பழைய பூங்கா பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வருகைக்கு எதிராக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பழைய பூங்கா அருகில் பொலிஸார் வீதித் தடைகளை அமைத்து போராட்டக்காரர்களை தடுத்து வைத்திருந்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பேருந்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகத்துக்கு வெளியே நீர்த்தாரை பிரயோகிக்கும் இயந்திரம், கலகமடக்கும் படை, பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

இன்று உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் வருகைதரும் ஜனாதிபதி மாலை 3 மணி முதல் 5.30 வரை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குகொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மாலை 7 மணி முதல் 9.30 வரை சிவில் சமூகப் பிரதிநிதிகளை அவர் சந்திக்கவுள்ளதோடு, வடக்கில் நான்கு நாட்கள் தங்கியிருந்து தொடர் சந்திப்புக்களையும் நடத்தவுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தின் போது எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை தடுக்கக் கோரி யாழ்ப்பாண பொலிஸார் விடுத்திருந்த கோரிக்கையை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றம் நிராகரித்திருந்த சூழ்நிலையில் கைதுகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (01,04)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்






வீரப்பதி விநோதன்
தென்கருணை, கரவெட்டி

# இலங்கை ஜனாதிபதித் தேர்தலும் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களும்

இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே வடக்கு - கிழக்கின் தமிழ் அரசியல் தலைமை நாட்டின் அரசியல் ஆட்சி அதிகாரத்தை ஐ.தே.கட்சியினரே வகிக்க வேண்டுமென்னும் விருப்புடன் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்தமையை யாவரும் அறிவர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் ஆரம்ப காலத்திலேயே ஐ.தே.கட்சியின் ஆட்சியின்போது அமைச்சர் பதவி வகித்து வந்தமை தெரிந்ததே.

1965ஆம் ஆண்டு இடம்டபெற்ற இலங்கை நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்



கில் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஐ.தே.கட்சி ஆட்சிபீடமேறுவதற்கு உறுதுணையாக இருந்தமையோடு அக்கட்சி சார்ந்த செனட்சபை உறுப்பினரான அமரர் மு.திருச்செல்வம் என்பவரை அமைச்சராக்கி ஐ.தே.க. அமைச்சரவையில் பங்கேற்றிருந்தது. இக்காலப்பகுதியில்தான் தமிழ்ப் பிரதிநிதிகளின் எதிர்ப்புக்கள் எவையுமின்றியே கிழக்கிலங்கையில் சில சிங்களக் குடியேற்றங்கள் இடம் பெற்றிருந்தமையும் இங்கு பிரதானமாகக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

தமிழ் ஈழம் என்னும் வரலாற்றுப் புகழ்வாய்ந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை முன்வைத்து 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது மேற்படி இரு கட்சிகளும் பிரதானமாக இணைந்து அமைந்திருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியானது அவ்வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கான வடக்கு - கிழக்கு மக்களின் ஆணையை மிகவும் வலுவான வாக்குப் பலத்துடன் பெற்றுக்கொண்டு நாடாளுமன்றம் சென்றமையும் தெரிந்ததே.

நாடாளுமன்றம் சென்ற இக் கூட்டணியானது தமிழ் ஈழம் வெறு நாடு ஸ்ரீலங்கா வேறு நாடு என்னும் வாய்ப்பாட்டை உஷாராக உச்சரித்து நின்றபோதும்கூட அவர்களுடைய வழக்கமான ஐ.தே.கட்சியின் பாலான கள்ளக் காதலினால் வட்டுக்கோட்டைத் திர்மானத்தைச் சிறிதளவேனும் மனக்கூச்சமில்லாமல் கொச்சைப்படுத்தியமையோடு, அத்தீர்மானத்துக்கான ஏகோபித்ததும் வலுவானதுமான மக்கள் ஆணையையும் துஷ்பிரயோகம் செய்து, “ஜே.அர்.பிரேமதாஸ. ஐ.தே.க. ஆட்சியின் தமிழர் விரோத நடவடிக்கைகளுக்குத் துணைபோன அமெரிக்க ஏகோபித்தியவர்களின் சதி முயற்சிகளக்க உறுதுணையாகவுமிருந்தனர்.

இதன் விளைவாக அவர்கள் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்த இளைய தலைமுறையினர் அவர்களுடைய சுயரூபத்தை இனங்கண்டமையோடு அவர்கள் மீது மிகுந்த சீற்றமும் அடைந்தனர்.

இவ்வாறான நகர்வின் இறுதிக்கட்டமாக இடம்பெற்ற தேர்தலின்போதும் பொதுஜன பெரமுனவுக்கு எதிராக வழமைபோலவே தமிழர் பிரதிநிதிகள் ஐ.தே.கட்சிக்கம் ரணிலுக்கும் வாக்களிக்கும்படி கோரி நின்றார்கள்.

ஆனால், அவர்கள் உள்ளடங்கலாக யாருமே எதிர்பார்க்காத நிலையில் தலைவர், ரணில் உட்பட ஐ.தே. கவினர் படுதோல்வியடைந்தார்கள். இப்படுதோல்வியானது வடக்கு - கிழக்கின் தமிழர் பிரதிநிதிகளது கள்ள மனங்களைப் பெரிதும் ஆட்டங்காண வைத்தபோதும் அவர்கள் அதைச் சிறிதளவேனும் வெளிக்காட்டவில்லை.

இதன் பின்னர் மகத்தான வெற்றியுடன் ஆட்சிக்கு வந்த பொதுஜன பெரமுனவின் தலைமைப்பீடத்தை அலங்கரித்து நின்ற மும்மூர்த்திகளான ராஜபக்ஷக்களுக்க எதிரான கிளர்ச்சியினால் அவர்கள் நாட்டை விட்டு ஓட, பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணிலின் உதவியை நாட, அவரும் அதற்குச் சம்மதித்து ஜனாதிபதியான அரசியல் ஆரோக்கியமற்றதும் சிரிப்புக்கிடமானதுமான திருக்கூத்தை நாட்டு மக்கள் விழி பிதுங்க நோக்கத் தவறவில்லை.

இத் திருக்கூத்தின் ஆரம்பத்திலிருந்தே ஜனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர்தலும் விரைவில் நடத்தப்படவேண்டுமெனப் பல்வேறு தரப்பினரும் இடித்துரைத்தபோதும்கூட ரணில் அவர்கள் முடிந்தளவு இழுத்தடித்துக் கொண்டேயிருந்தார்.

இந்நிலையில்தான் விரைவில் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலொன்று இடம்பெறுவதற்கான அறிகுறி தென்பட ஆரம்பித்துள்ளது.

அவ்வாறான ஜனாதிபதித் தேர்தலொன்று இடம் பெற்றால் வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் வகிபாகம் வழமைபோலவே அவர்களுடைய பிரதிநிதிகளின் கோரிக்கையின்பாலான தலையாட்டிப் பொம்மலாட்டமாக அமையுமா? என்பதே நடுநிலையாளர்களின் மிகுந்த ஆதங்கமாக உள்ளது.

இவ்விடத்தில் நாம் இலங்கையின் ஜனாதிபதியாகத் தமிழர் ஒருவர் ஒருபோதும் வரமுடியாதென்பதை மனதில் மிக ஆழமாக நிலைநிறுத்திச் சிந்திக்கவேண்டியவர்களாகவுள்ளோம்.

இலங்கையின் ஜனாதிபதியோ அல்லது நாடாளுமன்றமோ தமிழ் மக்களுக்கு ஒருபோதும் விமோசனம் அளிக்கப்போவதில்லை என்பதுதான் வட்டுக்கோட்டைத் திர்மானத்தின் உள்ளார்த்தமும் அதற்கான மக்கள் ஆணையமாகும். எனவே, இத் தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்காமல் விலகி நிற்பதுதான் முழுமையான நீதியின் பாலானதாகும்.

ஆனால், தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்பது சாத்தியப்பாடான ஒன்றல்ல. ஆகவே, வடக்குக் கிழக்குத் தமிழ் மக்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வேண்டியவர்களாகவே உள்ளார்கள்.

அவர்கள் தென்னிலங்கையின் ஜனாதிபதி வேட்பாளர்களுக்குள் பக்கச் சார்பாக வாக்களித்து அவர்களது வாக்களிப்பு யார் பக்கம் இருந்தது என்பது தெரியவும், அவர்கள் சார்ந்த தரப்பினர் வெற்றிபெறாவிட்டால் கடந்த தேர்தலில் ராஜபக்ஷக்களின் வெற்றியின்போது அவர்கள் பாதிக்கப்பட்டதைப்போலவே பாதிக்கப்படுபவர்கள்.

எனவே வடக்கு - கிழக்குத் தமிழர் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக (ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படும் நிலை இல்லாமல் இருந்தாலும்கூட) ஒரு பொது வேட்பாளரைச் சகல அரசியலாளர்களும் இணைந்து நிறுத்துவதன் மூலம் வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களை அவ்வேட்பாளருக்கு வாக்களிக்க வைத்து அவர்களது மனக்குறையை முற்றுமுழுதாக வெளிப்படுத்த வைப்



பதுதான் அறிவுடைமையாகும். இது தவறின் தமிழ் மக்களுக்கு காத்திருப்பது மேலும் மேலும் பெரும், பெரும் அழிவே!

# லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஏவுகணைத் தாக்குதல் ஹமாஸ் அமைப்பின் இரண்டாம் நிலைத் தலைவர் மரணம்

லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் ஹமாஸ் அமைப்பின் 2 ஆம் நிலைத் தலைவர் சலே அல்-அரூரியைக் குறிவைத்து நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் அவரும், அவரது பாதுகாவலர்களும் கொல்லப்பட்டதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

ஆளில்லா விமானம் மூலம் இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியதாக ஹமாஸ் அமைப்பும், லெபனானும் குற்றஞ்சாட்டியுள்ளன. இருந்தாலும், இந்தக் கொலைக்கு இஸ்ரேல் இதுவரை வெளிப்படையாகப் பொறுப்பேற்கவில்லை.

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் கடந்த ஒக்டோபரில் இருந்து நடைபெற்று வரும் போருக்கு இடையே, லெபனான் ஆயுதப் படையான ஹிஸ்புல்லாக்களுக்கும், இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையே சிறிய அளவிலான மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

ஆனால், தற்போது லெபனானுக்குள் ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டிருப்பதால் இந்தப் போர் லெபனானுக்கும், அதன் தொடர்ச்சியாக பிராந்திய நாடுகளுக்கும் பரவும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து லெபனான் அரசுக்குச் சொந்தமான தேசிய செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது,

பெய்ரூட்டில் உள்ள ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பில் செவ்வாய்க்கிழமை இரவு ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆளில்லா விமானம் மூலம் இஸ்ரேல் நடத்திய இந்தத் தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் துணைத் தலைவர் சலே அல்-அரூரியும், அவரது 6 பாதுகாவலர்களும் உயிரிழந்தனர் என்று அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

இஸ்ரேல் தாக்குதலில் தங்களது முக்கியத் தலைவர் கொல்லப்பட்டதை ஹமாஸ் அமைப்பும் உறுதி செய்துள்ளது. இஸ்ரேலுக்குள் தரை, கடல், வான் வழியாக கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி நுழைந்த ஹமாஸ் படையினர், அங்கு சுமார் 1,200 பேரை படுகொலை செய்தனர் என்று கூறப்படுகிறது.

அதையடுத்து, ஹமாஸ் அமைப்பினரை முற்றிலும் ஒழித்துக்கட்டுவதாக உறுதிபூண்டுள்ள இஸ்ரேல், காஸா பகுதியில் வான்வழியாகவும், தரைவழியாகவும் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதலில் இதுவரை 22,313 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

காஸாவில் உயிரிழந்தவர்களில் எத்தனை பேர் ஹமாஸ் படையினர், எத்தனை பேர் பொதுமக்கள் என்ற விவரத்தை அந்தப் பகுதி அதிகாரிகள் வெளியிடவில்லை. இருந்தாலும், இதுவரை சுமார் 8,000 ஹமாஸ் படையினரைக் கொன்றுள்ளதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது. முக்கிய ஹமாஸ் தளபதிகள் கொல்லப்பட்டதாகவும் ராணுவம் அவ்வப்போது அறிவித்து வந்தது.

இந்த நிலையில், முதல்முறையாக லெபனான் எல்லைக்குள் ஹமாஸ் அமைப்பின் மிக முக்கிய தலைவர்களில் ஒருவர் குறிவைத்துக் கொல்லப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தங்கள் நாட்டுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்திய ஹமாஸ் அமைப்பினரைப் பழிவாங்கியே தீருவோம் என்று இஸ்ரேல் உளவு அமைப்பான மொஸாடின் தலைவர் டேவிட் பார்னியா சூளுரைத்தார்.

ஜெர்மனியின் மியூனிச் நகரில் கடந்த 1972 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியின்போது பாலஸ்தீன பயங்கரவாதிகளால் இஸ்ரேல் விளையாட்டு வீரர்கள் கொல்லப்பட்டனர். இந்தத் தாக்குதலுக்குக் காரணமானவர்களை உலகின் பல்வேறு பகுதிகளிலும் மொஸாட் அமைப்பு வேட்டையாடிக் கொன்றது. இந்த நடவடிக்கையின்போது மொஸாட் அமைப்பின் தலைவராக இருந்த ஸ்வி ஸமீர் திங்கள்கிழமை காலமானார்.

ஜெருசலேமில் நடைபெற்ற அவரது இறுதிச் சடங்கில் பங்கேற்ற டேவிட் பார்னியா, பெய்ரூட்டில் ஹமாஸ் துணைத் தலைவர் சலே அல்-அரூரியை தங்களது உளவு அமைப்பினர் படுகொலை செய்ததை நேரடியாகக் குறிப்பிடாமல் பேசியதாவது-

இஸ்ரேலுக்குள் நுழைந்து தாக்குதல் நடத்தியவர்கள் அனைவருமே பழிக்குப் பழி வாங்கப்படுவார்கள். மியூனிச்சில் இஸ்ரேல் ஒலிம்பிக் வீரர்களின் படுகொலைக்கான பழிவாங்கலைப் போலவே, இந்த நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கும் சிறிது காலம் பிடிக்கும். மற்றபடி, இஸ்ரேலில் நடைபெற்ற படுகொலைகளுக்கு நேரடியாகவோ, மறைமுகமாக காரணமாக இருப்பவர்கள் அனைவரும் தங்களது முடிவை தாங்களே எழுதிக்கொண்டுவிட்டார் என்பதே உண்மை என்றார் அவர். (04)

## ஈரானில் இரட்டை குண்டுவெடிப்புத் தாக்குதல் 103 பேர் உயிரிழப்பு - 211 பேருக்குக் காயம்



நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவால் கொல்லப்பட்ட ஈரான் துணை ராணுவப் படை தளபதிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியின்போது நேற்று புதன்கிழமை நிகழ்த்தப்பட்ட இரட்டை குண்டுவெடிப்புத் தாக்குதலில் 103 பேர் உயிரிழந்து, 211 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈரான் துணை ராணுவத்தின் சிறப்பு அதிரடிப் படைப் பிரிவு தளபதியாக இருந்தவர் காசிம் சுலைமானி. அந்த நாட்டில் மிகவும் செல்வாக்கு மிக்கவராக விளங்கிய அவர் இராக் சென்றிருந்தபோது, அவரைக் குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா கடந்த 2020 ஜனவரி மாதம் தாக்குதல் நடத்தியது. இதில் சுலைமானி உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், காசிம் சுலைமானியின் 4ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான கெர்மானில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

அப்போது சுமார் 15 நிமிட இடைவெளியில் அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடித்தன. பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த அந்த வெடிகுண்டுகள் தொலைவிலிருந்தபடி வெடிக்கச் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் 103 பேர் உயிரிழந்ததாகவும், 211 பேர் காயமடைந்ததாகவும் சர்வதேச செம்பிறைச் சங்கம் தெரிவித்தது. இதில் பெரும்பாலானவர்கள் இரண்டாவது குண்டு வெடிப்பில் உயிரிழந்ததாகவும், முதல் குண்டு வெடிப்புக்குப் பிறகு அங்கு மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக அவர்கள் அங்கு குழுமியிருந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

ஈரானின் ஆதரவு பெற்ற ஹமாஸ் அமைப்பின் 2ஆம் நிலைத் தலைவர் சலே அல்-அரூரியைக் குறிவைத்து லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் இஸ்ரேல் வியாழக்கிழமை இரவு நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

இதனால், காஸாவில் நடைபெற்று வரும் போர், பிராந்தியத்தின் பிற பகுதிகளுக்கும் பரவுவதற்கான பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.


இந்நிலையில், ஈரானின் முக்கிய தளபதிக்கான அஞ்சலி நிகழ்ச்சியில் தற்போது நடத்தப்பட்டுள்ள இரட்டை குண்டுவெடிப்பு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (04)

## தேர்தல் ஆணைய அவமதிப்பு வழக்கில் இம்ரான் கான் குற்றவாளியாக அறிவிப்பு

பாகிஸ்தான் தேர்தல் ஆணைய அவமதிப்பு வழக்கில் அந்த நாட்டு முன்னாள் பிரதமர் இம்ரான் கானும், அவரது தகவல் தொடர்புத் துறை அமைச்சர் பவத் சௌத்ரியும் குற்றவாளிகளாக புதன்கிழமை அறிவிக்கப்பட்டனர்.

தேர்தல் ஆணையம் மற்றும் தலைமை தேர்தல் ஆணையர் சிக்கந்தர் சுல்தான் ராஜாவை தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி அவதூறாகப் பேசியதாக இம்ரான் மற்றும் பவத் சௌத்ரி மீது குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பான அவமதிப்பு வழக்கை விசாரித்து வந்த 4 தேர்தல் ஆணைய அதிகாரிகள் அடங்கிய அமர்வு, இந்த விவகாரத்தில் இம்ரான் கானும், ஃபவத் சௌத்ரியும் குற்றவாளிகள் என புதன்கிழமை தீர்ப்பளித்தது. அத்துடன், இந்த வழக்கின் விசாரணை வரும் 16 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.



ஏற்கெனவே, வெவ்வேறு வழக்குகளில் இம்ரான் கானும், பவத் சௌத்ரியும் ராவல்பிண்டியிலுள்ள அடிலாலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அதனால், இந்த தேர்தல் ஆணைய அவமதிப்பு வழக்கின் விசாரணை சிறைச்சாலை வளாகத்திலேயே நடைபெற்றது.

கடந்த 2022 ஏப்ரலில் பிரதமர் பதவியை இழந்ததிலிருந்து, இம்ரான் கான் மீது 150க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (04)

## பாஜக என்னை கைது செய்ய நினைக்கிறது! டில்லியின் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால்

பாஜக தன்னை கைது செய்ய நினைப்பதாக இந்தியத் தலைநகர் டில்லியின் முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் குற்றச்சாட்டு எழுப்பியுள்ளார்.

டில்லி கலால் கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்தியதில் ஊழல் நடைபெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதன் காரணமாக டில்லி முன்னாள் துணை முதல்வரும் கலால் துறை அமைச்சருமான மனீஷ் சிசோடியா, ஆம் ஆத்மி மாநிலங்களவை உறுப்பினர் சஞ்சய் சிங் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கலால் கொள்கை முறைகேட்டில் டில்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவாலுக்கும் தொடர்பு இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்தது. ஆகையால், விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு அவருக்கு இதுவரை மூன்று முறை சம்மன் அனுப்பப்பட்டிருந்தது.

அந்த சம்மனை நிராகரித்த கேஜ்ரிவால், அரசியல் உள்நோக்கத்துடன் தனக்கு சம்மன் அனுப்பப்பட்டதாக குற்றம்சாட்டி நேரில் ஆஜராகவில்லை. அரவிந்த் கேஜ்ரிவால் வீட்டில் இன்று அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும், அதன்பிறகு அவரை கைது செய்ய வாய்ப்புள்ளதாகவும் தகவல் வெளியாகின. இந்த நிலையில், அமலாக்கத்துறை சம்மன் குறித்து கேஜ்ரிவால் செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்துள்ளார்.

அப்போது, "தேர்தலுக்கு முன்பாக சட்டவிரோதமாக எனக்கு அமலாக்கத்துறை நோட்டீஸ் அனுப்பியுள்ளது. மனீஷ் சிசோடியா, சஞ்சய் சிங் மற்றும் விஜய் நாயர் பாஜகவின் அழைப்பை ஏற்க மறுத்துவிட்டனர்.

எதிர்க்கட்சியினர் மீது அமலாக்கத்துறை, சிபிஐயின் பல வழக்குகள் உள்ளன. பாஜகவில் இணைந்தால் அவர்களின் வழக்குகள் முடிந்துவிடும். பாஜகவில் சேரவில்லை என்றால் சிறைக்கு அனுப்பப்படுவர்.

ஊழல் செய்யப்படவில்லை என்பது தான் உண்மை. பாஜகவுக்கு என்னை கைது செய்ய வேண்டும். எனது மிகப்பெரிய சொத்தே எனது நேர்மை தான். அதனைக் குறைக்க பாஜக விரும்புகிறது. அமலாக்கத்துறை எனக்கு அனுப்பிய சம்மன் சட்டவிரோதமாக இருப்பதாக எனது வழக்கறிஞர்கள் கூறினார்கள்.

பாஜகவின் குறிக்கோள் என்னை விசாரிக்க வேண்டும் என்பது அல்ல. மக்களவைத் தேர்தலில் நான் பிரசாரம் செய்யக் கூடாது என்பதுதான். விசாரணை என்ற பெயரில் அழைத்து என்னை கைது செய்ய திட்டமிட்டுள்ளனர்.

நடப்பது அனைத்தும் ஜனநாயக நாடான இந்தியாவுக்கு ஆபத்தானதாகவும், தீங்கானதாகவும் உள்ளது. இந்தியாவுக்காக என் இதயம் துடிக்கிறது. பாஜகவை எதிர்த்து போராட உங்களின் ஆதரவு தேவை." என்று தெரிவித்தார். அரவிந்த கேஜ்ரிவாலின் வீடு அமைந்துள்ள சாலை காவல்துறையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (04)

# மாதர் சங்க பயிற்சி நிலையத்தின் பிரதேச மட்ட விற்பனை கண்காட்சி



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மண்முனை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விற்பனை கண்காட்சியானது பிரதேச செயலாளர் எஸ். சுதாகர் வழிகாட்டலில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் வவுணதீவில் இடம்பெற்றது.

மாதர் சங்க பயிற்சி நிலையத்தினால் உருவாக்கப்பட்ட ஆடைகள், கைவண்ண பொருட்கள் என பல தரப்பட்ட பொருட்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டதுடன் அவை விற்பனையும் செய்யப்பட்டன.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் சுபா சதாகரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள சிரேஷ்ட தையல் போதனாசிரியை , நிருவாக உத்தியோகத்தர், மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# திருகோணமலை பொது வைத்தியசாலை அமைக்க ஒதுக்கப்பட்ட காணி தொடர்பான கலந்துரையாடல்



(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அமைவாக திருகோணமலை பொது வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணி தொடர்பான கலந்துரையாடலானது மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் நேற்று மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்காக 50 ஏக்கர் நிலம் முன்மொழியப்பட்டுள்ளது. அதில் 25 ஏக்கர் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய காணிகளை விடுவிப்பதற்கு தேவையான கலந்துரையாடல்கள் மற்றும் விடுவிக்கப்பட்ட காணி தொடர்பில் எழுந்துள்ள சில பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ். சுதாகரன், பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பொ.தனேஸ்வரன், புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம், வனஜீவராசிகள் திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஏனைய தொடர்புடைய நிறுவனத்தினரும் கலந்து கொண்டனர்.






# புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலை காவலாளி அறை அமைப்பதற்கு உதவி

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் சாஹிரா ஆரம்ப பாடசாலையிக்கான வாயிற் காவலாளி அறை அமைப்பதற்கு பாடசாலை அதிபரினால் விடுக்கப்பட்ட வேண்டுகோலுக்கு இனங்க புத்தளம் சாஹிரா பாடசாலையின் 80 இன் சா-த சாஹிரியன் ஹீரோஸ் வகுப்பினரால் சீமெந்து பக்கட்டுக்கள் பாடசாலையின் அதிபர் ஏ.எம் ஜவாத் வசம் கையளிக்கப்பட்டன.

மேற்படி சீமெந்து பக்கட்டுக்களை 80 இன் சா-த சாஹிரியன் ஹீரோஸ் இன் ஊடக இணைப்பாளர் எம்.யூ.எம் சனூன் மற்றும் அமைப்பாளர் எஸ்.எம் இஹ்தியாஸ் ஆகியோரால் சாஹிரா ஆரம்ப பாடசாலையின் அதிபர் ஏ.எம் ஜவாத் இடம் கையளிக்கும் நிகழ்வின்போது பாடசாலையின் அபிவிருத்தி குழு உறுப்பினர் ஏ.எச்.எம் றிஸான் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம் றிமாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிண்ணியாவில் வெள்ளப் பாதிப்பு நிவாரண உதவிகள் வழங்கிவைப்பு



(எஸ். சினீஸ் கான்)

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கிண்ணியாப் பிரதேசத்தின் உப்பாறு, சோலைவெட்டுவான், மைலாப்பன்சேனை, காரைவெட்டுவான், கண்டல்காடு போன்ற கிராமங்களுக்கான நிவாரண உதவி நேற்று புதன் கிழமை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கினால் வழங்கிவைக்கப்பட்டது.

இதன்போது கிண்ணியா பிரதேச செயலாளர் முகம்மது கணியும் உடனிருந்தார்.

# ஜப்பான் நிலநடுக்கத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை 73 ஆக உயர்ந்துள்ளது

ஜப்பான் நாட்டின் இஷிகாவா தீவுக்கு அருகே ஜப்பான் கடல் பகுதியில் திங்கட்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 7.6 அலகுகளாகப் பதிவானது. இதனால் அந்த மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் குடியிருப்புகள், வணிகக் கட்டடங்கள் குலுங்கின. அதன் பிறகும், தொடர்ச்சியாக 20க்கும் மேற்பட்ட முறை சிறிய அளவிலான நிலநடுக்கங்களும், நில அதிர்வுகளும் தொடர்ந்தன.

தொடர் நிலநடுக்கங்களைத் தொடர்ந்து இஷிகவா மாகாணத்துக்கு தீவிர சுனாமி எச்சரிக்கையும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு குறைந்த அளவிலான சுனாமி எச்சரிக்கையும் ஜப்பான் அரசு விடுத்தது. கடற்கரைக்கு அருகே அமைந்துள்ள குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி, பாதுகாப்பான பகுதிகளுக்குச் செல்லுமாறு ஜப்பான் அரசு எச்சரித்தது.

இந்த நிலையில், நிலநடுக்கத்தால் சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 73ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் நேற்று கூறினர். இது தவிர, 392 பேர் காயமடைந்துள்ளதாகவும், சுமார் 15 பேர் காணாமல் போயுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (04)

# விசேட டெங்கு ஒழிப்பு வாரம்

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 7ஆம் திகதி முதல் விசேட டெங்கு ஒழிப்பு வாரத்தை பிரகடனப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போதுள்ள டெங்கு அபாயத்தை கருத்திற் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளர், விசேட வைத்திய நிபுணர் பாலித மஹிபால தலைமையில் சுகாதார அமைச்சில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதுடன், பொலிஸ் மற்றும் முப்படைகளின் பிரதானிகள், டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பிரதிநிதிகள் மற்றும் பலர் இதில் கலந்துகொண்டனர்.

மாவட்ட மட்டத்தில் இன்று (04) முதல் டெங்கு நுளம்பு ஒழிப்பு குழுக்களை ஸ்தாபிக்கவும் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் உள்ள சகல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களையும் மையப்படுத்தி விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டில் 88,398 டெங்கு நோயாளர்கள் மற்றும் 58 இறப்புகள் பதிவாகியுள்ளதாக டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

சுகாதார வைத்திய அதிகாரிகளின் 71 பிரிவுகள் அதிக ஆபத்துள்ள வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பதிவாகும் டெங்கு நோயாளர்களை விட அதிகமானோர் சமூகத்தில் இருக்கலாம் என டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (04)

# வடமாகாண புகையிரதக் கடவை காப்பாளர்கள் பணிப்புறக்கணிப்பு

வடமாகாணத்தைச்சேர்ந்த பாதுகாப்பற்ற புகையிரத கடவையில் பணியும் கடவைக் காப்பாளர்கள் 24 மணி நேர பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டுள்ளனர்.

தமக்கான சம்பளத்தை அதிகரிக்க வலியுறுத்தியும், நிரந்தர நியமனத்தை வலியுறுத்தியும் இந்த பணிப்புறக் கணிப்பில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த கடவை காப்பாளர்கள் பொலிஸ் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் நாளார்ந்தம் 250 ரூபா என மாதார்ந்தம் 7500 ரூபாவைப் பெற்றுவருகின்றனர்

இந்தக் கொடுப்பனவு தற்போதைய நிலையில் தமக்குப் போதாது எனத் தெரிவித்துள்ள அவர்கள், அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு, உரிய தீர்வினை பெற்றுத்தரவேண்டும் என தெரிவித்தனர். (02)

# மின்சார நெருக்கடிக்கு காரணிகள் கண்காணிப்புக் குழு அறிக்கை

நாட்டின் தற்போதைய மின்சார நெருக்கடிக்கு முதன்மையாக உள்ள காரணிகளைக் குறிப்பிட்டு, பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைக் குறைப்பது குறித்து துறைசார் கண்காணிப்புக் குழு அறிக்கை ஒன்றைத் தயாரித்துள்ளது.

குறித்த அறிக்கையின் ஊடாக, மின்சார நெருக்கடியை சமாளிப்பதற்கான முன்மொழிவுகள் மற்றும் அவதானிப்புகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்துள்ள மின் கட்டணத்தை தொடர்ந்தும் கடைப்பிடிப்பதன் மூலம் நெருக்கடி மேலும் தீவிரமடைந்து வருவதை அவதானிக்க முடிந்ததுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுஜன பெரமுன ரணிலுக்கே ஆதரவு!



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்டால் அவருக்கு பொதுஜன பெரமுனவின் ஆதரவு கிடைக்கும் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே இந்த விடயத்தை அவர் பகிர்ந்துகொண்டார்.

பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவுடன் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

ஆகவே, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவருக்கு ஆதரவளிப்பதில் கட்சிக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது.

நாடு தற்போது பொருளாதார ரீதியாக மீண்டு வருகிறது. அதற்கான பெருமை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கே வழங்கப்பட வேண்டும், எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (04)







# அம்பாறை மாவட்டத்தில் 40 வர்த்தகர்களுக்கு அபராதம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 40 வர்த்தகர்களுக்கெதிராக நீதிமன்றங்களில் 1 இலட்சத்து 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில், அம்பாறை மற்றும் தெஹியத்தக்கண்டிய ஆகிய பகுதிகளில் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்ட 115 வியாபாரிகள் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு 40 வியாபாரிகளுக்கு தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளதுடன், ஏனையோருக்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கட்டுப்பாட்டு விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்தே இச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பொருட்களை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதலான விலைக்கு விற்றமை, விலைப்பட்டியலை காட்சிப் படுத்தாமை, நுகர்விற்கு பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்தமை, மின் உபகரணங்களின் கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வியாபாரிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்கள், - என்றும் அவர் குறிப்பிட்டார்.


JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk